மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

ந.க.சி1/58326/2008 நாள்:30.09.2019

## பொது ஏல அறிவிப்பு

தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாக்கும் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 44/97) பிரிவு 3-ன் கீழ் அரசு ஆணை (பல்வகை) எண். 351 உள் (காவல் -19), துறை, நாள். 24.04.2009 -ன்படி இடை முடக்கம் செய்யப்பட்டு, சட்டப்பிரிவு 4(3) மற்றும் 4(4)-ன் படி சென்னை டான்பிட் சிறப்பு நீதிமன்றத்தால் அசல் மனு வழக்கு எண். 17/2013, நாள்.29.06.2017-ன் நாளிட்ட தீர்ப்பின்படி விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்பட்ட திருவாளர்கள் ஸ்ரீ சப்தகிரி என்ற நிதி நிறுவனத்திற்கு சொந்தமான கீழ்க்கண்ட அசையாச் சொத்துக்கள் வேலூர் மாவட்ட தகுதி பெற்ற அதிகாரி/ மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பகிரங்க ஏலம் விடப்பட உள்ளது.

### சொத்து விவர பட்டியல்

அரசு ஆணை (பல்வகை) எண். 351 உள் (காவல் -19), துறை, நாள். 24.04.2009

| வ. எண். | உரிமதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | சொத்துக்களின் பரப்பு மற்றும் விவரம் |
|---|---|---|
| 1. | தி/ள் சப்தகிரி நிதி நிறுவனத்தார். | **சொத்துவிவரப்பட்டியல்-"A"**<br><br>வேலூர் மாநகரம், வடவேலூர் ரெவின்யூ எண்.-1 , முனிசிபல் எண். டவுன் சர்வே எண்.3157 – $14^{1/2}$ சென்ட்ஸ். பட்டா எண்.592.இதன் எல்லைகள்,<br>வடக்கே: நைனியப்பன் மற்றும் குடும்பத்தார் நிலம் வரை<br>கிழக்கே:திரு.வினோத்குமார் நிலம் வரை (ஷெட்யூல்-B சொத்து)<br>தெற்கே:தேசிய நேடுஞ்சாலை வரை,<br>மேற்கே:தி/ள்.நாகா ஜீவல்லர்ஸ் நிலம் வரை<br>வேலூர் மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், வேலூர் சார்பதிவாளர் அலுவலத்திற்குட்பட்டது.<br><br>**சொத்துவிவரப்பட்டியல்-"B"**<br><br>வேலூர் மாநகரம், ரெவின்யூ எண்.-1, முனிசிபல் எண்.-1 டவுன் வடவேலூர், டவுன் பிளாக்-37, சர்வே எண்.3157-ல் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டுமானம் 1500 ச.அடி. கிழக்கு – மேற்கு திசையில் வடக்கில் 28 அடியாகவும், தெற்கு பகுதியில் 28 அடியாகவும், வடக்கு - தெற்கு திசையில் மேற்கில் 55 அடியாகவும் மேற்கு பகுதியில் 61 அடியாகவும், மொத்தமாக 1624 ச.அடி.(பொது வழி உட்பட) இதன் எல்லைகள், |

| | | |
|---|---|---|
| | | வடக்கே: நைனியப்பன் மற்றும் குடும்பத்தார் நிலம் வரை<br>கிழக்கே:வேலூர் மாநகராட்சியின் 20 அடிவரை<br>தெற்கே: திரு.பி.கிருஷ்ணமூர்த்தி நிலம் வரை<br>மேற்கே: திரு.வினோத்குமார் நிலம் வரை (ஷெட்யூல்-A சொத்து)<br>வேலூர் மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், வேலூர் சார்பதிவாளர் அலுவலத்திற்குட்பட்டது. |

மேற்கண்ட அசையாச் சொத்துக்களை 07.11.2019 முற்பகல் 11.00 மணியளவில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தகுதி பெற்ற அலுவலர் மற்றும் வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் (வேலூர்) மூலமாக சொத்துக்களை ஏல தேதிக்கு முன்பாக பார்வையிடலாம் என்றும் தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவிக்கிறார்.

ஓம்/ஜெ.பார்த்தீபன்.
தகுதி பெற்ற அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்
வேலூர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

ந.க.சி1/58326/2008 நாள்:30.09.2019.

திருவாளர்கள் Sri.Sapthagiri Finance Ltd.

அரசு ஆணை (பல்வகை) எண். 351 உள் (காவல் -19), துறை, நாள். 24.04.2009

ஏல நிபந்தனைகள்

1. விண்ணப்பத்தில் ஏலம் கோர இருக்கும் சொத்தின் விபரம், கேட்பு வரைவோலை விபரம், ஏலதாரரது முழு முகவரி மற்றும் புகைப்படம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.
2. அசையாச் சொத்துக்களின் ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் திரும்பத் தரக்கூடிய பிணை வைப்புத் தொகையாக ரூ.25,000/- க்கான கேட்பு வரைவோலைகளை (Demand Draft) ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "Competent Authority and District Revenue Officer, Vellore" பெயரில் பெற்று ஆஜர்படுத்த வேண்டும்.
3. ஏலம் கேட்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே ஏலம் நடத்தும் இடத்திற்கு வந்து கேட்பு வரைவோலையை அலுவலகத்தில் அளிக்க வேண்டும்.
4. ஏலம் மூலம் கோரப்பட்ட உயரந்தபட்ச விற்பனைத் தொகையைக் கோரிய ஏலதாரர் ஏலத் தொகையில் 25% தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலையாக ஏலம் நடத்தும் அலுவலரிடம் உடனே செலுத்திட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், அவரது கேட்பு ரத்து செய்யப்படுவதுடன் அவர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஏலம் உறுதி செய்யப்பட்ட தொகைக்குரிய சரக்கு மற்றும் சேவை வரிக்கான (GST) தொகையை ஏலதாரரே செலுத்த வேண்டும்.
5. இந்த பொது ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் அதிகபட்ச ஏலம் கோரியவர் விதிகளின்படி 25% விற்பனைத் தொகையை செலுத்தியது போக மீதமுள்ள 75% தொகையை ஏலம் நடந்த நாளிலிருந்து 2 தினங்களுக்குள் செலுத்திட வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுத் தொகையையும் செலுத்தத் தவறினால் குறிப்பிட்ட நபர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகைகள் முழுவதும் அரசுக்கு பறிமுதல் செய்யப்படுவதுடன், விதிகளின்படி அடுத்தபடியாக அதிகத் தொகை ஏலம் கேட்ட நபருக்கு வாய்ப்பளிக்கப்படுவது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலரின் முடிவே இறுதியானது.

6. ஏலத்தில் விடப்படும் மாவட்ட நிர்வாகம் வசமுள்ள அசையாச் சொத்துக்கள் அன்றைய தினம் உள்ள நிலையிலேயே விற்பனை செய்யப்படும்.

7. ஏல அறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட பின்னரோ அல்லது விற்பனை உறுதி ஆணை பிறப்பிப்பதற்கு முன்னரோ நிபந்தனைகளை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ தகுதிபெற்ற அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கு நஷ்ட ஈடு கோர மனுதாரர்களுக்கு உரிமையில்லை.

8. உறுதி செய்யப்பட்ட விற்பனையை சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள் பொது நன்மையைக் கருதி ரத்து செய்ய நேரிட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஈடு கோர மனுதாரருக்கு உரிமையில்லை.

9. அறிவிப்பில் கண்டுள்ளவாறு மாவட்ட நிர்வாகம் வசமுள்ள அசையாச் சொத்துக்களின் பேரில் நீதிமன்றத்தில் ஆணை/ தடையாணை பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட சொத்தினை விற்பனை செய்வது குறித்து தகுதிபெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

10. அசையாச் சொத்துக்களை ஏலம் மூலம் வாங்கியவருக்கு எந்த காரணத்தினை முன்னிட்டும் இழப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க இயலாது.

11. அசையாச் சொத்துக்கள் தொடர்பான விபரத்தினை வேலூர் பொருளாதார குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் விபரம் கேட்டுப் பெறலாம்.

12. பதினெட்டு வயதிற்குட்பட்டோர் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது. ஏலம் நடத்தும் அலுவலர் எந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கும் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கலாம். எவ்வித காரணமும் அறிவிக்காமல் ஏலம் நடத்தும் இடத்திலேயே எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் வெளியேற்றுவதற்கு ஏலம் நடத்தும் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

13. ஏலத்தில் விலை கோருபவர்கள் ரூ.5000/-ன் மடங்குகளில் தொகையை கோரப்பட வேண்டும்.

14. ஏலம் நடத்துகிற இடத்திற்கு வெளியே இருந்து கேட்கும் கேள்விகளும் ஏலம் முடித்த பின்பு வரும் கோரிக்கைகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஒவ்வொரு ஏலதாரரும் தனிப்பட்ட முறையில் ஏலம் கோர வேண்டும். ஏலதாரர்கள்

கூட்டாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இணைந்தோ ஏலம் கேட்டால் அத்தகைய கோரிக்கை அனுமதிக்கப்படமாட்டாது.

15. ஏலம் ஆரம்பமாகும்போது இந்த ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகள் மற்றும் ஏலம் நடத்தும் அலுவலரால் அறிவிக்கப்படுகின்ற சிறப்பு நிபந்தனைகள் ஆகியவை வாசித்துக் காண்பிக்கப்படும். ஒவ்வொரு ஏலதாரரும் அந்த நிபந்தனைகளை வாசித்து அறிந்து கொண்டதை ஒப்புக் கொள்ளும் வகையில் ஏல விளம்பரத்தின் நகலில் கையொப்பம் இட வேண்டும்.

16. ஏலம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஏலக் கோரிக்கையை ஏலம் உறுதி செய்யப்பட்ட ஏலதாரர் திரும்பப் பெற்றுக் கொள்ள இயலாது.

17. தபால் மூலமாகவோ, அல்லது தந்தி மூலமாகவோ கோரப்படும் ஏலக் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒம்/-ஜெ.பார்த்தீபன்.
தகுதி பெற்ற அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்
வேலூர்.